**உகுவெல பிரதேச சபை**
**மாதளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 28 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உகுவெல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபை கட்டிடத்தில் இரண்டாம் மாடி மற்றும் ஹெல பொஜுன்ஹல போன்ற இரண்டு நிர்மானங்களின் முடிவடைந்த வேலை பெறுமதி ரூபா 7,412,417 ஆன தொகை கட்டிடங்களிற்கு கீழும், அதற்காக மீள் நிரப்பப்பட வேண்டிய ரூபா 4,877,780 கடன் பட்டோரின் கீழும், ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 5,815,534 ஆன தொகை கடன் கொடுத்தோரின் கீழும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான குரலவெல தெற்கு இடுகாட்டின் பெறுமதி ரூபா 200,000 குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்ததுடன், 7 காணிகளுக்கான பெறுமதி ரூபா 128,000 மீளாய்வாண்டின் நிலையான சொத்துகளின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான 35 இடுகாடுகளின் மற்றும் 67 பொது குழாய் கிணறுகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை

(ஈ) ரூபா 460,027 ஆன 441 இருப்புவகைகளின் பெறுமதி மற்றும் 91,460 ஆன ஆயுர்வேத இருப்புகளின் பெறுமதி இறுதி இருப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 8,663,137 மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,941,317 ஆன தொகை குறைத்தும் ஆண்டிற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் மற்றும் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 92,477 கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2014 மற்றும் 2015 ஆண்டுகளினுள் நிர்மான மற்றும் அபிவிருத்தி செயல்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,295,969 ஆன தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லாததுடன், கருத்தரங்கு மண்டபம் நிர்மானத்தின் பெறுமதி ரூபா 614,375 ஆன தொகை கூடுதலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(எ) ரூபா 583,868 பெறுமதியான 15 கடன் பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 3,512,586 பெறுமதியான 33 கடன் கொடுத்தோர் மீதிகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லாததுடன், 6 வேலைகளுக்கான கடன் பட்டோர் மீதிகள் ரூபா 482,456 ஆன தொகை கூடுதலாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 29,699,381 ஆன 5 கணக்கு விடயங்களில் மீதிகள் மற்றும் அவைகளுக்கான துணைப்பதிவேடு மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளின் இடையில் ரூபா 9,651,715 ஆன வித்தியாசம் நிலவியது.

**1.3.3 பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் 6 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,313,320 ஆனதுடன், அம் மீதியினுள் ஓராண்டு காலத்தை மேற்பட்ட 3 ஆண்டுகளுக்கு குறைந்த நீண்ட காலம் தீர்க்கப்படாத ரூபா 2,244,489 ஆன மீதியும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தீர்க்கப்படாத ரூபா 380,442 மீதியும் உள்ளடங்கியுள்ளது.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 7 கடன் கொடுத்தோர் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,857,256 ஆனதுடன், அம் மீதியினுள் ஓராண்டு காலத்தை மேற்பட்ட 3 ஆண்டுகளுக்கு குறைந்த நீண்ட காலம் தீர்க்கப்படாத ரூபா 605,986 ஆன மீதியும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தீர்க்கப்படாத ரூபா 3,911,867 மீதியும் உள்ளடங்கியுள்ளது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக 9 விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 125,658,985 ஆன மீதிகள் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| | | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|---|
| (அ) | | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி ஒழுங்கின் 218 ஆம் விதி | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக் மெய்மையாய்வு செய்யப்பட்டிக்க வில்லை. |
| (ஆ) | | சுற்றறிக்கை மற்றும் ஏனைய கடிதங்கள் | |
| | (i) | 2015 ஜுலை 14 ஆம் திகதி இலக்கம் 04/2015 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை | - சபையின்காக விலை மனு கோரல் இன்றி 8 வண்டிகளுக்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் காப்புறுதி மேற்கொள்ளப்பட்டு ரூபா 326,948 செலுத்திருந்தது.<br>- 6 நூலகங்களுக்காக விலை மனு கோரல் இன்றி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் காப்புறுதி மேற்கொள்ளப்பட்டு ரூபா 31,671 செலுத்திருந்தது. |
| | (ii) | 1988 மே 17 திகதிய இலக்கம் 1988/22 கொண்ட உள்ளுராட்சி திணைக்களச் சுற்றறிக்கை | 2007 ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/3 கொண்ட மத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாலரின் | - மதிப்பிடப்பட்ட மாதாந்த வாடகை குறைந்த பச்சம் 5 வருடத்திற்கு ஒரு முறையாவது சீர்திருத்தம் செய்யவேண்டிய |

| | |
|---|---|
| சுற்றறிக்கையில் 05 பிரிவு | போதும், 65 கடையறைகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை ஒரே அளவான வாடகை அறவிடப்ட்டிக்கொண்டிருந்தது. |
| | - A,C மற்றும் D பொது வியாபார கடையறை வாடகை 2010 திசெம்பர் 22 திகதிய மற்றும் வியாபார B பகுதியின் 21 கடையறைகளின் வாடகை 2015 மே 13 திகதிய மதிப்பிடப்பட்டிருந்த போதும், 2016 திசெம்பர் 31 திகதி வரை அவ் வாடகை அறவிடுவதற்கு மற்றும் புது ஒப்பந்தங்கள் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 15,232,423 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 18,577,241 ஆனது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,344,818 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பிரதேச சபையின் நிதி விளைவுகளில் மறறும் நிதிசார்செயலாற்றலினையும் மீதான முக்கியமான அவதானிப்புகள் மற்றும் முக்கியமான சில விகிதங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்காக 3 வருமான மூலங்களில் ரூபா 8,546,638 ஆன வருமானம் குறைதல் மற்றும் செலவின விடயமொன்றில் ரூபா 709,798 ஆன செலவு அதிகரித்தல் விஷேடமாக தாக்கம் விளைவித்திருந்தது.

(ஆ) மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 42,479,163 ஆனதுடன், அதில் சம்பளத்திற்கு மாத்திரம் ரூபா 29,058,485 ஆன தொகை அல்லது, 68 வீதம் செலுத்திருந்தது.

(இ) நிதி விளைவுகளில் மிகை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக எடுக்கையில் மீளாய்வாண்டில் அச் சதவீதத்தில் குறைவொன்று காணப்பட்டது.

(ஈ) மொத்த செலவு மொத்த வருமானத்தின் சதவீதமாக எடுக்கையில் மீளாய்வாண்டில் அச் சதவீதத்தில் அதிகரிப்பு காணப்பட்டதுடன், நிதி கட்டுப்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலைமை அதில் காணப்படவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வீதவரி

நிலுவை வீதவரி மீதி ரூபா 786,657 ஆனதுடன், அம் மீதினுள் 3 வருட காலத்துக்கான, ரூபா 215,392 மீதி உள்ளடங்கப்பட்டிருந்தது.

**2.3.2 ஏனைய வருமானம்**

(அ) ஏக்கர் வரி

நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 31,334 ஆனதுடன், இவ் மீதி 7 வருட காலத்திளிலிருந்து நிலவியது.

(ஆ) நீர்க் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 1,710,835 ஆனதுடன், அம் மீதினுள் 3 வருட காலத்தை விஞ்சியிருந்த ரூபா 120,185 ஆன மீதி உள்ளடங்கியுள்ளது.

(ii) நீர் விநியோகத்தை துண்டிக்கப்பட்டிருந்த 74 நீர் பாவினையாளர்களின் ரூபா 214,623 ஆன தொகை அறவிடப்பட வேண்டி இருந்ததுடன், அம் மீதினுள் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 111,084 ஆன மீதி நிலவியது.

(இ) குப்பை கட்டணம்

நிலுவை குப்பை கட்டணம் மீதி ரூபா 13,531 ஆனதுடன், அம் மீதி 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாமை நிலவியது.

**2.3.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 460,727 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 10,125,220 ஆன தொகை பெற வேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டுக்கான பாதீட்டு கொள்கைகள் கூற்று பிரகாரம், 2016 ஆண்டுக்காக ஓவிலிகந்த மக்கள் நூலகத்தில் கணனி பயிற்சி நிலையமொன்று ஆரம்பித்தலூடாக தொழில்நுற்ப விடயத்தை ஊரிற்கு கொண்டுபோவதும், ஊரில் எல்லா பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் பிரதேசத்தில் இளைஞர் யுவதிகளுக்கு தொழில்நுற்ப அறிவை மேம்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தி கொடுப்புதும் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் அந் நிலையம் நிருவப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அன்பளிப்பாக கிடைத்திருந்த வண்டிகள் மற்றும் இயந்திரங்கள் சேலையில் ஈடுபடுத்துவதற்கு போதியளவு சேவகர்கள் இல்லாததனால் சாரதிகள், இயந்திரங்கள் செயற்படுத்துவர்கள் மற்றும் இயந்திர உதவியாளர்கள் அனுமதிக்கப்பட்டு ஆட்சேர்ப்பது பாதீட்டு கொள்கைகள் கூற்று பிரகாரம் பிரதான நோக்கமாயினும், அச் செயல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** சபை கட்டிடம் அமைந்துள்ள 0.1827 ஹெக்டயார் ஆன காணி பங்குக்கான ஒப்படைக்கும் கட்டளைகள் சபைக்கு கிடைத்திருக்கில்லாததனால் பிரதேச சபை பெயரில் பதிவு செய்ய முடியாமல் இருந்ததுடன், அக் காணியின் முதல் உரிமையாலரினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படடிருந்த பூதல்

வழக்கு பிரகாரம் அவரால் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பகுதிற்கு மேலதிகமாக 16 பர்சர்ஸ் காணித்துண்றொன்றை சபை அனுபவிக்கிறது என காட்டப்பட்டுள்ளதுடன், காணியை மீண்டும் அளந்து பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** ரூபா 1,951,000 பெறுமதியான 13 காணிகளின் உரிமை சபை பெயரால் பதிவு செய்யப்பட்டு 2 ஆண்டு முதல் 15 ஆண்டு வரை காலம் கடந்திருந்த போதிலும், அக் காணிகள் அமைந்துள்ள இடங்களை சரியாக இனங்கண்டிருக்கவில்லை.

**(இ)** சபை பதவியணியினரின் அனுமதிக்கப்பட்ட 8 பதவிகளில் 17 வெற்றிடங்கள் மற்றும் 2 பதவிகளில் 3 மிகை நிலவியது.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 430 கட்டிட விண்ணப்பங்களின் 200 யிற்காக அனுமதி வழங்கியிருந்த போதும், அவற்றின் 19 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் இணங்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) “E” நென பியச கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சபையின் நிருவப்படவதற்கு நியமிக்கப்பட்ட தகவல் தொழ்ல்நுட்ப நிலையத்துக்காக 2014 ஜுன் 25 ஆம் திகதி ரூபா 594,061 பெறுமதியான 17 அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதும். அக் கருத்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் அவ் உபகரணங்களின் அதிகமானவை அலுவலகத்தின் நடவடிக்கைக்காக ஈடுபடுத்திக்கொள்ளப்பட்டிருந்தது.

**3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2015 மே 13 திகதி கிடைக்கப்பட்டிருந்த RD-9449 டெக்டரை 2017 ஏப்ரல் 09 ஆம் திகதி வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எல்கடுவ நகரில் உள்ள பழைய நூலகம் மற்றும் ஆயுர்வேத மருத்துவமணை அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் பிரயோசனத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் புதிய வீதவரி மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு ரூபா 1,128,415 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 திகதி வரை அவ் அறிக்கையை பெற்றுக்கொண்டு புதிய வீதவரி கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ முன்னைய நகர உறுப்பினர் ஒருவரான, சபையின் மக்கள் நூலகத்தின் நூலக உதவியாளராக சேவையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு சேவைக்கு ஒழுங்காக சேவைக்கு செல்லாமல் மற்றும் முறையாக சேவை மேற்கொள்ளாமல் இருந்த போதும் 2013 முதல் 2015 திசெம்பர் வரை ரூபா 827,172 ஆன சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்திருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரையும் அதன் மீதான பரிசோதனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 இணங்கண்ட நட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தென்ன குறுக்கு பாதை அபிவிருத்திக்காக சபை நிதியத்தினால் 2014 இல் செலுத்தப்பட்ட ரூபா 147,182 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும், பிரதேச செயலாளரினால் மீள் நிரப்பப்பட்டில்லாததனால் அத் தொகை சபை நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட நட்டமாக இருந்தது.

**(ஆ)** 2005 ஆண்டின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பாதையான போவத்த நுகபிட்டிய பாதை அபிவிருத்தி செய்யும் போது தனியார் காணியொன்றுக்கு இழப்பு ஏற்பட்ட காரணத்தால் மாதளை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு காலாவதியானது என குறித்த வழக்கரிஞர்கள் அறியாமையினால் பல வருடங்கள் வழக்கு நடாத்திச்செல்லப்பட்டதன் காரணமாக 2006 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை வழக்கரிஞர் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 210,866 ஆன தொகை சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டமாக இருந்தது.

**(இ)** காணி உரிமையாளரின் எதிர்ப்பு இருந்த போதும் 2012 ஆகஸ்ட் மாதம் வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்டிருந்த கெந்தகொல்லாமட பாதை அகலமாக்கப்பட்டு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்ததன் காரணமாக குறித்த காணி உரிமையாளரால் 2012 செப்தெம்பர் 25 ஆம் திகதி மாதளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இப்போது குறித்த பாதையை அபிவிருத்தி செய்வதற்கு சபை எதிர்பார்க்கவில்லை என அறிவித்து முறைபாட்டை தள்ளுபடி செய்வதற்கு கேட்டு இருந்த போதும், குறித்த வழக்கு முடியாததனால் மீளாய்வாண்டு இறுதிவரையும், வழக்கரிஞர்கள் கட்டணமாக ரூபா 123,500 செலவிடப்பட்டிருந்தது.

**3.7 கருத்திட்டங்கள் தாமதித்தல்**

பின்வரும் விடயயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டின் மாகாண குறித்த அபிவிருத்தி உதவி உள்ளுராட்சி நிறுவனங்கள் சேவை (புதிய வேலை) நூலக அபிவிருத்தியின் கீழ் உகுவெல மக்கள் நூலகத்தை பழுதுபார்தலுக்காக ரூபா 304,580 பெறுமதியான கம்பி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2017 ஏப்ரல் 9 திகதி வரையும் அக் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இன்னும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கம்பீகளில் ரூபா 78,340 பெறுமதியான கம்பிகள் முறையான பூர்வ அனுமதியின்றி சபையின் ஏனைய கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆண்டின் பிரதேச சபை வழுவூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்த ரூபா 5,650,000 ஆன 11 கருத்திட்டங்களுக்கும் நேர்சிரமம் பெற்றுக்கொள்வது கடினமானதனால் 2017 பெப்ரவரி 01 வரையும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லாததுடன், சபை பொது நிதியத்தினால் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த ஒதுக்கீடு தொகை ரூபா 3,867,626 ஆன 22 வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.8 ஒப்பந்த நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குருலவெல தெற்கு நட்பு சமுதாய அடிப்படை நீர் உத்தேச திட்டத்தை மேம்படுத்தல்

மாகாண குறித்த அபிவிருத்தி உதவின் கீழ் ரூபா 2,000,000 ஆன ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்த முன்னே குறிப்பிட்ட கருத்திட்டத்தின் நிர்மான பணிகள் நேர்சிரமம் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** கிணறு மற்றும் பம்பி அறை நிர்மானிக்கப்பட்ட வளவின் உரிமை காணி உரித்தாலரிடமிருந்து சுவீகரிக்கப்பட்டிருக்காததுடன், கிணற்றின் நீர் கொள்ளளவு

போதியளவானது எனவும் மற்றும் நீரின் தகுதி மீது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** 2016 திசெம்பர் 23 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,993,088 ஆன வேலை முடிந்த பட்டியல் பெறுமதி 2017 ஜனவரி 17 ஆம் திகதி மீள் நிரப்பப்பட்டிருந்தது. பட்டியலில் உள்ளடங்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 1,953,033 ஆன 12 வேலை விடயங்கள் 2017 பெப்ரவரி 02 அன்று பூர்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.9 கழிவு பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தின் தினத்தோறும் சேர்க்கப்படும் 4 - 4¼ மெற்றிக் டொன் அளவான பொருட்களின் வேறுபடுத்தப்பட்ட கழிவு பொருட்கள் 2 மெற்றிக் டொன் அளவு தெமடகொல்ல குப்பை மீள்சுழற்சி நிலையத்தில் இயற்கை பசளை தயாரிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டின் ரூபா 73,750 ஆன வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. மீதி கழிவு பொருட்கள் மீள்சுழற்சி நிலையத்தில் அருகில் காணிக்கு இடப்பட்டு மண்ணால் மூடப்பட்டிருந்ததுடன், சேர்க்கப்படும் கழிவு பொருட்களில் பெரும் தொகையொன்று சுற்றாடலுக்கு மாசடையும் முறையில் இடப்பட்டுக்கொண்டு நிலவியது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுக்காக சபையின் அலுவலர் ஒருவரை நியமிக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**(அ)** 2 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 325,000 எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லாததுடன், 28 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களின் இடையில் 39 சதவீதம் முதல் 149,950 இடையில் வீச்சளவான விலகல்கள் நிலவியது.

**(ஆ)** 17 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,169,600 ஆன ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், 36 செலவின விடயங்கள் தொடர்பாக தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கு இடையில் 37 சதவீதம் முதல் 684 சதவீதம் வரை வீச்சளவான விலகல்கள் நிலவியது.

**(இ)** மீளாய்வாண்டினுல் பாதீடு திருத்ததிற்கு உள்ளாக்கியதன் பின்னரும்,பாதிடபட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்.
(ஆ) பதவியணியினர் முகாமைத்துவம்.
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்.
(ஈ) பாதீடு கட்டுப்பாடு.